உதயதாரகை—MORNING STAR.

PUBLISHED AT MANEPY, CEYLON, TWICE EACH MONTH. | Righteousness exalteth a Nation: but Sin is a Reproach to any People. | PRICE—TWO SHILLINGS A YEAR, PAYABLE IN ADVANCE.

௰௩ம் புத்தகம், சஞ்சிகை ௰௯.] ௲அ௱ருகூ ௵. ஐப்பசி மீ. ௰௩ உ. வியாழக்கிழமை.—Thursday, October 13, 1853. [VOL. XIII. No. 19.

TERMS OF THE PAPER.

A single copy 2 shillings a year. Mail subscribers, free of postage, 4 shillings—TO BE PAID IN ADVANCE. If payment is delayed beyond the first quarter, 6 pence extra; if beyond the second, or July 1st, 1 shilling. To Native Agents, who will send ADVANCE PAY for 5 copies, we will send the 6th gratis, and at this rate for any number of copies.

Advertisements inserted for 3 shillings a square; less than a square 2 shillings. At this rate each will appear twice, *if the advertiser so requests.*

All notices of deaths and marriages will be chargeable as advertisements.

Communications must be *post paid* to receive attention. The following persons will act as Agents for the Star.

JAFFNA—THE MISSIONARIES.
POINT PEDRO,—L. LEISCHING, ESQ.
TRINCOMALIE, { Rev. J. WALTON, W. G. HALL, Esq.
COLOMBO—MESSRS. P. B. FERNANDO & SON.
KANDY—MR. L. LAWTON.
BATTICALOE—Rev. J. KILNER.
MADURA—Rev. C. F. MUZZY.

[Dedication of Alavetty Village Chapel.]

தேவாலயப் பிரதிஷ்டை.

மல்லாகக் கோவிற்பற்றைச்சேர்ந்த அளவெட்டிக்குறிச்சியில் மெய்த்தெய்வ ஆராதனைக்கென்று கட்டப்பட்ட தேவாலயம் போனமாதம் உஉந் திகதி வியாழக்கிழமை பிரதிஷ்டை பண்ணப்பட்டது.

அச்சமயத்திலே வந்துகூடின சனங்களுக்குப் பேசின விசேஷங்களின் கிரமங்களாவன:

தானியேற்பூரையர் எழும்பித் தேவனுக்குப் புகழ்ச்சியாகப் பாடும்படி ஓர் ஞானப்பாட்டை வாசித்துத் தேவஸ்துதிசெலுத்தி, அதன்பின் அந்தக் கோவில் கட்டப்பட்ட நோக்கத்தையும், அதில் வந்து கூடின காரணத்தையும், அதினாலுண்டான செலவு வரவையுமெடுத்துக் காட்டிக் கூட்டந்தொடங்க, ஈ. ஈ. பேசின்பிரசங்கியார் எழும்பி அச்சமயத்துக்கேற்றதாய்த் தெரிந்தெடுக்கப்பட்ட வேத வசனங்களை வாசிக்க, அதின்பின் இஸ்போல்டிங் ஐயர் எழும்பித் தேவனைப்பார்த்துப் பிரதிஷ்டைப் பிரார்த்தனைபண்ணி முகித்தார்.

ஓர் தமிழ்க்காலியம் பாடப்பட்டதின்பின், மெக்ஸ் ஐயரெழும்பி இது தேவனுடைய வாசஸ்த[illegible]யன்றி வேறல்ல. இதுவே வானத்தின் வாச[illegible]ன்ற வசனத்தின்பேரிலொரு பிரசங்கம் பண்ணினார்.

அதன்பின் ஒரு ஞானப்பாட்டுப்பாடிமுடிய, ஈ. ஈ. நயில்ஸ் பிரசங்கியாரெழும்பி, நீயும் எங்களோடே வா, உனக்கு நன்மைசெய்வோம், என்றவசனத்தை ஆதாரமாகக்கொண்டு அளவெட்டியிலிருக்கிற குடிசனங்களுக்குத் தகுந்த ஒரு பிரசங்கத்தைப்பண்ணினார்.

அதன்பிறகு தேவஸ்துதியும் ஆசீர்வாதமுங் கூறப்பட்டு முன்னேரக்கூட்டம் முடிந்தது.

இந்தக்கூட்டத்தில் கறுத்தமனிதரில் உருய. பேரளவுக்கு வந்துகூடினதுமன்றி அமெரிக்கன்மிசியோனில் அனேகரும், யாழ்ப்பாணஞ் சீதாரியிலிருந்து சிறிது துரைமக்களும் வந்து கூடினார்கள்.

இக்கோவிற் சிவர் கல்லினாலே சட்டப்பட்டது. அதின் நீளம் ருச அடி. அகலம் கூய அடி. கதவு கூ. பலகணிவாசல் ச. வீட்டைத் தாங்குகிறதற்கு எட்டுத்தூண்களும் இலுப்பைத் தீராந்திகளுமுண்டு. அது தெற்குப்புறத்திற் கேவல்வடிவமும், வடக்குப் புறத்திற் கோபுர வடிவமுமான சித்திர அலங்காரமாய்ச் செய்யப்பட்டு முகிந்தது.

இக்கோவில் கட்டும்படி சென்றசெலவு எய பவுன். நிலம்வாங்கக் கொடுத்தபணம் ச பவுன். ஆகத்தொகை எச பவுன். இதற்கு நன்கொடையாக முன்னே வட்டுக்கோட்டையிற் சாஸ்திரப்பள்ளிக்கூடத்திற் படித்த அளவெட்டிக் குறிச்சியிற் பிள்ளைகள் கொடுத்தபணம் பவுன் யகூ. சிலிங்கு யகூ. அந்தக் குறிச்சியைச்சேராத மற்றுந் தருமசாலிகள் கொடுத்தபணம் பவுன் க. சிலிங்கு யரு. அமெரிக்கன் குருமார் தங்கள் சொந்தப்பணமாய்க் கொடுத்தபணம் பவுன் யக. சிலிங்கு உ. இங்கிலீசுத்துரைமார் கொடுத்தபணம் பவுன் யரு. சிலிங்கு உ. குறிச்சிக்குக்குறிச்சி கோவில் கட்டப்படும் முகாந்திரமாய்ச் சேகரித்துவைத்த முதற்பணத்தொகையிலிருந்து கொடுக்கப்பட்டபணம் பவுன் யரு. ஆகக்கூடியதொகை பவுன் கூய. சிலிங்கு யஅ. இந்த வரவுத்தொகையைச் செலவுத்தொகையாகிய எச. பவுனிலிருந்து தள்ளினால், பதின்மூன்று பவுனும் இரண்டுசிலிங்கும் இன்னுங் கோவில்பேரிலே கடனிருக்குதென்பது வெளியரங்கமாயிருக்கின்றது.

இந்தக் கடனை அந்தக் குறிச்சியிற் சனங்கள்தானே கொடுத்துத்தீர்ப்பார்களென்று விரும்பியிருக்கிறதுமன்றிப் பிரதானமாய் அக்குறிச்சியைச்சேர்ந்தவர்களாயிருந்தும் இதற்காகப் பணங்கொடுத்து ஒத்தாசைசெய்யச் சமயமில்லாமலிருக்கிற மற்றும் படித்த பிள்ளைகள்தானே அதற்கொத்தாசை செய்வார்களென்றுங் காத்திருக்கிறோம். அல்லாமலும், இந்த நன்முயற்சியிற் பங்காளிகளாய் வரவிரும்புகிற கறுத்தமனிதரும் வெள்ளைக்காரரும் நன்கொடையாகச் சிறிது தருமஞ்செய்யும்படிக்கு அவர்களை மெத்தத் தாழ்மையுடனே வேண்டிக்கொள்ளப்படுகுது. இருக்கிறகடனுக்கு அதிகமானபணம்வந்து சேரக்கூடியதாயிருந்தால், கடனுக்குக்கழித்து மிச்சப்பணத்தை எடுத்துக் குறிச்சிக்குக்குறிச்சி கோவில்கள்கட்டும்படியாகச்சேமித்துவைத்த முதற்பணத்தோடேசேர்த்துவைத்துச்செலவிடப்படும்.

விக்கிரகாராதனை பண்ணும்பொருட்டுக் கோவில்முதலிய திருப்பணிகளைச் செய்யும்படி இவ்வூரவர்களில் அனேகர் தாராளமாய்க் கனதொகையான பணத்தைச் செலவிட்டுவந்ததை நாங்கள் வெகுகாலமாய்க்கண்டு கவனித்திருந்தாலும் இப்பொழுதோவென்றால், மெய்த்தேவனொருவரென்றும் அவர் ஒருவர் மாத்திரமே ஆராதனை செய்யப்படத்தக்கவரென்றும் இவ்விதமான எண்ணங்கள் சனங்களிலே தலைப்படவும் அவர்களுடைய மனதிலே பதிந்துவரவும் காண்கிறது எங்களுக்குச் சந்தோஷம். இதுவுமன்றித் தருமச்செய்கையிற் பிரியப்படுகிறவர்களும், பொதுநன்மையில் விருப்பமுள்ளவர்களுமாகிய சகலரும் பின்னில்லாமல் முன்னேறிவந்து இந்தக்கோவிலை வேயத்தக்க ஓடும் அல்லது கோவிலுக்கு ஒரு மணியும் வாங்கத்தக்க பணப்பொறுப்புப் பண்ணக்கூடிய தருமதாதாக்களிடத்திலிருந்து உதயதாரகையின் எட்டிற்றர் நன்கொடை வாங்குவாரென்று அறிவிக்கப்படுகுது. மேலும் சொல்லவேண்டிய ஒரு பிரதானகாரியமென்ன[illegible]வில், அளவெட்டிக்குறிச்சிக்கு உடையார்வேலைபாரபரித்துவருகிற, ஈ. ஈ. மு. அம்பலவாணரவர்கள் இந்தக் கோவிலுக்குக்கிட்ட ஒரு பந்தற் போடுவித்து, அதில் வந்த துரைமாருக்கு ஒரு பெரிய விருந்துபண்ணினார். அதிற் சாப்பிட்டவர்கள் துரைமாருந் துரைச்சாணிகளுமாகப் பதினைந்துபேர். அவ்விதமாய், இந்தக் கோவிலைக் கட்டுகிறதற்கு மூன்றுபவுனும் நிலம்வாங்க நாலுபவுனுங் கொடுத்த, மெஸ்தர் லிங்கன் இறிப்பிளியென்பவரும் கூட்டத்துக்குவந்த கறுத்தமனிதர்கள் சகலரையுந் தமது வீட்டுக்கு அழைத்துக்கொண்டுபோய்ச் சகலருக்குஞ் சந்தோஷமாக ஒரு விருந்துண்டுபண்ணினார். அதிற் சகலவகையான சாதிகளும் ஒருபாயிலிருந்து சாப்பிட்டாலும் யாதொருவரென்கிலும் பெருமை சிறுமையென்கிற சாதிவித்தியாசம் பார்க்கவில்லை. மேலும் அந்த விருந்தில் நடந்த ஒரு சந்தோஷமான புதினமென்னவெனில், தமிழருடைய எண்ணத்தின்படி இழந்த சாதியாயும், அமெரிக்கன் குருமாரிடத்தில் உபதேசி வேலையாயும் நிற்கிறவயோதிபமுள்ள ஒரு மனிதனை அந்தவிடத்தில் ஒரு மிக்க இருத்தினதாகவும், முதனிரையில் தலைப்பந்தியில் வைத்துச் சாப்பாடு கொடுத்ததாகவுந் தெரியவந்தது. இது தமிழருக்குள்ளே பலமுறையும் நடக்கும் மாதிரிக்கு மெத்த வித்தியாசம்.

Baptism.—பிறகிட்ட ஒய்வுநாட்காலையில் தேவபத்தர் ஒருமித்துக் கூடித் தேவனை ஆராதிக்கப் போயிருக்குஞ் சமயத்தில் நானும் அவர்களில் ஒருவனாகப் போயிருந்தேன். அப்பொழுது எனக்கும் என்போலிய கிறிஸ்தவர்கள் யாவருக்குஞ் சந்தோஷத்தை யுண்டாக்கத்தக்க ஓர் விசேஷித்த செய்கையைக் கண்டேன். அது யாதெனில் கட்டைவேலிக் கோவிற்பற்றைச் சேர்ந்த நுன்னாலைக்குறிச்சியிலிருந்து அக்கோவிலில்உவெஸ்லியன் மிஷன் ஸ்தாபித்த பெண்பிள்ளைப் பள்ளிக்கூடத்திற் சிலவருஷம்படித்து வெகுகாலமாக அஞ்ஞானபந்தத்தாற் கட்டப்பட்டு அத்துளு, செல்லச் சந்நிதி, வல்லிபுரமென்றுஞ் சொல்லப்பட்ட இடங்களிலிருக்கிற சொரூபங்களை நமஸ்கரித்துவந்த இரண்டு யௌவனமுள்ள பெண்பிள்ளைகள் கிறிஸ்துமார்க்கக் காரியங்களை இவ்விடத்திலிருக்கும் உவெஸ்லியன் மிஷன் தருமப்பள்ளிக்கூடத்திலும் போதியளவு கற்றறிந்தபின் அக்கோவிலின் சிரேஷ்ட குருவானவரால் ஞானஸ்நானத்தைப் பெற்றுக்கொண்டார்கள்.

ஐயாவே! பெண்பிள்ளைப் பள்ளிக்கூடங்களை வைத்து அவைகளைத் தாபரித்துவருவதினாலே சுவிசேஷக்குருமார் அதிக நன்மை செய்து வருகிறார்களென்பதற்குச் சந்தேகமில்லை. இப்பெயர்ப்பட்ட பள்ளிக்கூடங்களை வைப்பதினால் எவ்வளவு ஆத்துமாக்கள் நரகாக்கினையினின்று தப்பி மோட்சத்துக்குரியவர்களாகிறார்கள். கிறிஸ்துமார்க்கப் போதனைகளை நன்குணர்ந்த பெண்களேயன்றி வேறார் "ஒன்றே தேவை" என்ற அபேட்சையுடையவர்கள். இவர்கள் பரத்துக்குரியவைகளை நாட, பொன் வண்டுகளுக்குச் சமானமாய்த் தங்களை அலங்கரித்து, கல்வி கற்பது கற்புக்குரியதல்லவென்று தள்ளும் ஸ்திரிகள் மடைப்பள்ளிவேலைக்கன்றி மற்றேதுக்குரியவர்கள். இப்படிப்பட்டபொன்வண்டுகளாகிய மடைமை நிறைந்த பெண்கள் தேவபத்தி கல்வியென்னும் இரண்டு கண்களற்றவர்களாயிருந்தாலும், அப்படிப்பட்டவர்களையே தங்கள் நன்மை தீமைகளிலும், வாழ்வு தாழ்வுகளிலும், சுகதுக்கங்களுக்கடுத்த யோக்கியமான பாரிகளாக்குவது நயமென்றெண்ணி, சாஸ்திர சூத்திரங்களை மிகவுங் கற்றுத் தேவபத்தியுள்ளவர்களென்று மாயப்போர்வையிட்டு வெகுகாலந் தேவதாசரை மயக்கி, மற்றவர்களையும் அணுப்பி, குருடராயிருக்கிற அனேகருக்கு ஐயோ! இப்படிப்பட்டவர்கள் பிறவாவிட்டால் நலமென்று சொல்லலாமே. ஆனால் ஒருதிவ்வியவாக்கைமாத்திரஞ்சொல்லிமுடிப்பேன். இப்பெயர்ப்பட்டவர்கள் அப்போஸ்தலனாகிய பவுல்சொல்வதைக்கேட்டு உற்றுணர்வார்களாக. அவிசுவாசிகளுடன் ஒரு நுகத்திற் பூட்டப்படாதிருப்பீர்களாக. நீதிக்கும் அநீதிக்குஞ் சம்பந்தமென்ன, இருளுக்கும் ஒளிக்கும் ஐக்கமென்ன? கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் இசைவுண்டா? அவிசுவாசியுடன் விசுவாசிக்குப் பங்குண்டா? ஆதலால் நீங்கள் அவர்களிடத்திலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய், அசுத்தமானதைத் தொடாதிருங்களென்று கர்த்தர் சொல்லுகிறார். அப்பொழுது நான் உங்களை அங்கிகரித்துக்கொண்டு, உங்களுக்குப் பிதாவாயிருப்பேன். நீங்கள் எனக்குப் புத்திரரும், புத்திரிகளுமாவீர்களென்று சருவவல்லமையுள்ள கர்த்தர் சொல்லுகிறார்.

இப்படிக்கு,
புரட்டாதி மீ உகூஉ. ஓர்குட்டிமெதோடிஸ்ற்.

என் ஐயாவே,

மெய்வேதசாரம், ரும். புறம் உம். பாட்டில் "கமலச்சரணம்" எது கமலாசரணம் என்றும், அ. புறம், கூ. பா. "தேவன்–சீவன்–பாசம்" எ–து தேவன் சீவன்ஆன்மா, எ–ம். கீர்த். விஞ்சதி, எ. புறம் வெண்பாவில் "இரங்கு" எ-து இரங்கி எ–ம். உய. பு. வெண்பா "சைந்து" எ–து ரங்கி எ–ம். அச்சிற் பிழைபட்டாற்போல் இன்னும் அப்புத்தகத்திற் பற்பல பிழைகள் நுழைந்திருக்கின்றனவென்று நம்புகிறேன். ஆயினும் அப்பிழைகள் யாவும் இரண்டாம் முறை பதிக்கப்படுகையில் களையப்படுமாதலால் அதைக் கவலையாய் வாசிக்கும் பிறரும் தாங்கள் காணும் பிழைகளைக்குறித்து அடியேன் வசம் தயவாயனுப்புவார்களானால் அவர்க்கு மிகநன்றியுற்றிருப்பேனென்பதைத் தமது தாரகையிற் பிரசுரஞ் செய்யத் தம்மைப் பிரார்த்திக்கிறேன்.

இப்படிக்கு, A.

இச்செலவு இங்கிலீசுகாரருக்கும் பிரமருக்கும் யுத்தம் நடந்தவேளையில் மறியற்படுத்தப்பட்டும் இப்பொழுது விடுதலையாயிருக்கிற ஒவ்வொரு மறியற்காரருக்கும் பிரமதேசத்தைச்சேர்ந்த ஏவாப்பட்டணத்தின் இராசாவானவர் மாணிக்கம்பதித்த ஒரு கணையாளியையும் ஒரு சிறுப் பொற்பெட்டியையும் உபகாரமாகக் கொடுத்திருக்கிறார். அவைகளில் கணையாளிமாத்திரம் அறுபது பவுன் பெறும். இந்த இராசா இங்கிலீசுகாரரைத் தனதுபண்ணிக்கொள்ளப் பார்க்கிறார்போலே தெரியவருகுது. ஆசியாதேசத்து இராசாவாகிய ஒருவன் தன் இராச்சியங்களில் அரைவாசியளவுக்குப் பறித்துக்கொண்டவேறொரு தத்துவகாரருக்கு இவ்விதமான சிநேகக் குணங்களைக் காட்டுவது தகுந்த நியாயமாய்க் காணாததினால், இந்த இராசா ஏதோ ஒரு பொல்லாத நோக்கத்தைப்பற்றி இப்படி எல்லாருக்கும் வெகுமதிபண்ணினார்போலே விளங்குகுது.

உதயதாரகை.

துஅாஇரு ஞூ. ஐப்பசி மீ. யரு வ.

Mutiny.—சிங்கப்பூரிலிருந்து வம்பாய்க்கு ஒருகப்பல் ஓடிப்போகையில் அதிலிருந்த யாவககிலாசுகாரருக்குள்ளே ஒருபுரளி நடந்தது. எப்படியெனில், அந்தக் கப்பலுக்கு இரண்டாங் கற்பித்தானுயிருந்த ஒருவெள்ளைக்காரனுக்குக் கிலாசுகாரரில் ஒரு யாவுகன் அடித்தபொழுது, அவன் அந்த யாவுகனை ஒருபோல்லினுலே அடித்துக் கீழே விழுத்திப்போட்டான். கிலாசுகாரரெல்லாரும் யாவுகரானதினுலே ஒருமித்தெழும்பி ஆயுதமுந் தரித்துக்கொண்டு அவனைக் கொன்றுபோட முயறசிப்பட்டார்கள். அப்பொழுது அந்த வெள்ளைக்காரன் சமுதாடொன்றைக் கையிலே பிடித்துத் தன்னைக் காவல்பண்ணிக்கொள்ளுகிறதற்குத் தன்னுலானமட்டும் பார்த்துங் கூடாமற் பயந்தோடிப்போய்க் கப்பலின் உள்ளறையிற்குள்ளே ஒளித்துவிட்டான். அங்கேயும் யாவகர் பின்தொடர்ந்து ஓடிக் கொல்லப்பார்த்தபொழுது, அவர்கள் வெள்ளைக்காரனிருந்த அறைக்குள்ளே போகாதபடிக்குச் சீருங்கு என்ற ஒருவன் கதவுக்குக்கிட்டநின்று அவர்களை மறித்துக்கொண்டான். உடனே கற்பித்தானும்வந்து அவர்களுக்கு நல்லிணக்கமான கதையைச்சொல்லித் தான் வம்பாயிற்போய்ச் சேர்ந்தவுடனே அந்த வெள்ளைக்காரனை விட்டுவிளங்கி அவனுக்கு ஆக்கினை பண்ணுவேனென்று நிச்சயித்ததினுல் அவர்கள் தங்கள் எண்ணத்தை விட்டிளகிச் சாந்தமாயிருந்தாலும் அவர்கள்போய்க் கரைசேருமளவுக்கும் அந்த வெள்ளைக்காரனிருந்த அறையை நன்ருய்க் காவல்பண்ணிக்கொண்டு நின்ருர்கள். கப்பலும் வம்பாய்போய்ச் சேர்ந்தவுடனே அந்த வெள்ளைக்காரனை விளங்கி, அவன் குற்றவாளியானதினுல், ருய. ரூபாய் அபராதங் கொடுக்கும்படி தீர்மானமாயிற்று. இப்படி அவனுக்குக் குற்றம்போட்டதே அவனுடைய சீவனுக்கு நலமாயிருந்தது.

Vain Expense.—மைசூர்தேசத்தின் இராசாவுக்கு அறுபது வயதுவர இன்னுஞ் சிறிதுநாளிருக்கிறதினுலே அன்றைத்தினம் பத்துப்பன்னிரண்டிலட்சம் உருபாவுக்குச் செலவுபண்ணி மகா அலங்காரமாய் அந்நாளைக்கொண்டாடும்படி ஆயத்தமாயிருக்கிருரென்று சென்னபட்டினத்துப் புதினப்பத்திரிகையினுற் தெரியவருகுது. முன்னும் வெகுபணம் பிராமணுக்களுக்கு அள்ளி வீணுயிறைக்கப்பட்டது. இப்படிப்பட்ட வீண்செலவைப் பண்ணவிடாமல் அதை அரசாட்சியார்தானே தடுக்கவேண்டுமென்று இந்தப் புதினத்தை எழுதினவர் அபையமிடுகிருர். ஏனென்ருல், இராசா பட்டகடன் இன்னுங் கொடுத்துத் தீரவில்லை. கொஞ்சங்குறைய இவ்வூர்ப் பிறந்த இராசாக்களெல்லாரும் யாதொரு வித்தியாசமில்லாமல், ஒன்றில்வாவாசியென்பவரைப்போலத் தங்கள் பணத்தைச் சற்றுஞ் செலவிடாமல் பிசினித்தனமாய் எல்லாவற்றையுஞ் சேர்த்துத் திரட்டிவைத்துக்கொள்ளுகிருர்கள். அல்லது கருநாடகத்து நபாபைப்போலத் தங்கள் பணத்தை வீணிலே வாரியிறைக்கிருர்கள். இரண்டிலொன்று நடந்துவருகுதென்பதற்குச் சந்தேகமில்லை. இந்த இராசாக்களைச் சிவிலாக யாதொரு பிராதும் பண்ணப்படாதென்று ஒரு கெட்ட கட்டளை முறையிருப்பதினுலே அவர்கள் எவ்வளவு கடனளிகளாயிருந்தாலும் அதைப் பாராமல் தங்கள் பணத்தை வீணிலே செலவழிக்க இடமாகுது. இங்கிலிசுகாரருக்குள்ளே ஒருவன் எவ்வளவுயர்ந்த உத்தியோகஸ்தனுயிருந்தாலும் அவன் தான் பட்ட கடனை இறுக்கிறதற்கு வழியில்லாமலிருக்கிறபொழுது அவன் ஆஸ்திக்கு விரோதமாக வெலியாத்தெடுத்து அவனுடைய காணி பூமி விற்கப்படுகிறதுபோல, இந்த இராசாக்களுக்குஞ் செய்வதுண்டானுல், ஒன்றில் அவர்கள் தங்கள் கடனைக் கொடுத்துத் தீர்த்துப்போடுவார்கள், அல்லது அதற்கான நட்டமும் ஆக்கினையுமடைவார்கள்.

Fearful Tragedy.—சீனதேசத்துக்கடுத்த சமுத்திரங்களிலே பிராணசேத சம்பவங்கள் அடிக்கடி நடந்துவருகின்றன. பிறகிட்ட ஆவணி மாதம் ஐந்தாந்திகதியிலன்று ஒரு கப்பல் சீனதேசத்தைச் சேர்ந்த கொங்கொங்கென்னும் பட்டினத்தை விட்டுப் பாய்வலித்தோடிற்று. அந்தக் கப்பலுக்கு முதற் கற்பித்தானும் இரண்டாம் மூன்ருங் கற்பித்தானும் வெள்ளைக்காரர். மேலும் வேறே மூன்று வெள்ளைக்காரரும் அதில் ஏறிப் பயணம்போனுர்கள். கிலாசுகாரரிற் பத்துப்பேர் சீனர். மற்றவர்களெல்லாரும் யாவகர். இந்தக் கப்பல் துறையை விட்டுப்போய் இருபத்திநாலு மணித்தியாலத்திற் பிற்பாடு அந்தப் பத்துச்சீனருமெழும்பி, வெள்ளைக்காரரைக் கொன்றுபோட்டு, தங்களுக்கு அகப்படக்கூடிய சகல விலைபெற்ற பொருள்களையும் அள்ளிக்கொண்டு வள்ளத்திலேறித் தப்பிவிட்டார்கள். சிறிது வெள்ளைக்காரருடைய சடங்களை அந்திக் கப்பலிற் காணுதிருக்கிறதினுல் அவர்கள் சமுத்திரத்திலே விழுந்து நீங்கித் தப்பிவிட்டார்களென்று காண்குது. கொலைபாதகர்தானே அந்தக் கப்பலைமறுபுடியுந்திருப்பிக் கொங்கொங்கு பட்டணத்துக்குக் கொண்டுபோனுர்கள். இந்த வெள்ளைக்காரரைக் கொலைபண்ணின சீனரைக் கற்பித்தானுடைய நாய் கடித்துக் காயப்படுத்தியிருக்கிறதினுலே, அந்தக் காயந்தானே அவர்கள் இன்னுரென்று காட்டிக்கொடுக்கும்போலேயிருக்குது.

China.—சீனதேசத்திலே தாத்தாரி இராசன் பக்கத்தைச்சேர்ந்த படைசேனங்கள் பிறகிட்ட ஆவணிமீ. உகூவ. இரண்டுபக்கமாய்ப் பிரித்துக் கலகக்காரருக்கு விரோதமாய்ப் போய் ஒரு பிரிவார் கலகக்காரருடைய அரண்களிற் பீரங்கி தீர்ந்தும் அதிகமாக யாதொரு மோசமுஞ் செய்யவில்லை. மற்றப்பகுதியார் வேறொரு திக்காய்ப் போய்க் கலகக்காரருடைய கிராமங்களிற் சிலவற்றை அழித்துப்போட்டார்கள். மற்றநாள் இருபத்தேழாந்திகதி கலகக்காரர் அவர்களோடெதிர்த்து யுத்தம்பண்ணியும் கலகக்காரரிலேதானே அனேகர் சேதம்போனுர்கள். அன்று பின்னேரம் இராசன்பக்கத்தார் கலகக்காரருடைய இரண்டு கோட்டைகளிற் பீரங்கி தீரக் குண்டுகளெல்லாம் எங்கும் பறந்து அடுக்க இருந்த குடிசேனங்களுடைய சீவனுக்கு வெகு மோசத்தைப்பண்ணிற்று. கலகக்காரரைப் பார்க்கிலும் இராசாவின்பக்கத்துப் படைசேனங்கள் அனேகம்பேராயிருந்ததினிமித்தம் அவர்கள் கலகக்காரரைச் சிறிதுநாளாகப் பயப்படுத்திவைத்ததினுல் அவர்களுடைய தலைவர்களில் ஒருவன் வெட்கத்துக் கஞ்சி நஞ்சு தின்று இறந்துவிட்டான். ஆனுலும் மற்றநாள் இருபதுதிக்குமுண்டான சண்டையில் கலகக்காரர் வேற்றிகொண்டார்கள். திரும்ப முப்பதாந்தேதியிலன்றுண்டான யுத்தத்தில் கலகக்காரர் தோற்றுப்போனதினுல் அவர்களில் அனேகர் கொல்லப்பட்டதுமன்றி வேறனேகர் மறியற்காரராகப் பிடிக்கப்பட்டார்கள். தப்பியோடினவர்களையும் கப்பலிலே இருந்து சுட்டு அனேகம்பேரை விழுத்தினுர்கள். அதன்பின் இராசாவின்பக்கத்தார் கலகக்காரருடைய நாலு கிராமங்களைச் சுட்டுத் தங்களுக்ககப்பட்ட சகல ஆண்சனங்களையுங் கொன்றுபோட்டுத் தங்கள் பாளயத்துக்குப் போகையிற் கலகக்காரர் அவர்களைத் தொடர்ந்துபோய் அவர்களில் முப்பத்துமூன்றுபேரை மறியற்காரராகப் பிடித்துக்கொண்டு பட்டினத்துக்குத் திரும்பிப்போனுர்கள். இன்னும் இராசாவின் பக்கத்திற் சனங்களைப் பிடித்து தலைகொண்டுவந்து காட்டுகிறவர்களுக்குத் தலையொன்றுக்கு எட்டுச்சிலிங்கு கொடுக்கப்பட்டதினுல் இவர்களைத்தவிர வேறுமனேகரைப் பிடித்து வெட்டித் தலைகொண்டுவந்தார்கள்.

Monkey Story.—குரங்குகள் தெய்வீகப்படைப்புகளென்று வங்காளத்துச் சனங்களெண்ணி அவைகளைச் சங்கைபண்ணிவருகிருர்கள். அரபியனொருவன் குரங்கொன்றைச் சுட்டான். அதினுடனேசேர்ந்த கிளைகளெல்லாம்போய் உடனே ஊர்த்தலையாரிக்குப் பிராதுபண்ண, அந்தத் தலையாரி குரங்குகளின் முறைப்பாடின்னதென்று வெகுபிரயாசத்துடனே மட்டுக்கட்டிக்கொண்டாலுங் குரங்கைச் சுட்ட அரபியனுக்கு யாதொரு ஆக்கினையுஞ் செய்யவில்லை. ஆனதினுல் குரங்குகளெல்லாஞ் சாபம்போட்டதின்பிற்பாடு போய்ச் சுடப்பட்டிறந்த குரங்கையெடுத்துப் புதைத்தது. மற்றநாள், குரங்குசுட்ட அரபியனுடைய சரீரமெல்லாம் வீங்கிப்போக, தலையாரியுடைய கந்தோரும்நெருப்புச்சுவாலையாகப் புகைந்து, சிறிதுநாழிகைக்குள்ளே அந்தப்பட்டணத்தில் அரைவாசியும் பெருநெருப்புப்பற்றி எரியத்தக்கவையாயிருந்தது. சனங்களெல்லாரும் நெருப்பை நூற்கிறதைவிட்டு, குரங்குகளுக்குச் சாந்திபண்ணி அனுமானுக்குத் திருவிழா எடுத்ததின்பிறகு, நெருப்பை நூர்த்தார்களென்று இப்படியொரு பைத்தியமானகதை வம்பாயிற் புதினப் பத்திரிகையில் அச்சுப்பதிக்கப்பட்டிருக்கின்றது.

Cholera.—போனமாதம் உஎ. திகதியிலன்று ஒருவர் கற்பிட்டியிலிருந்து கொழும்புக்கெழுதின புதினமாவது: சிறிதுநாளைக்கு முன் வடதேசத்தாலே புத்தளத்தில் வந்திருந்த வடதேசத்துச் சனங்களில் மூன்று பேருக்குப் பேதிவியாதியுண்டாயிற்று. அவர்களுடனே கூடவந்த சிநேகிதர்கள் ஒரு இருத்தலை மிளகாயெடுத்துக் கொடிக்கள்ளிப்பாலவிட்டு நன்ருய் அரைத்து அவர்களுக்குச் சரீரமடங்கலும் பூசினுர்கள். பிற்பாடு இரண்டு இருத்தல் மிளகாயை எடுத்து வறுத்துக் கொஞ்சத் தண்ணீரை விட்டவித்து அவர்களுக்குக் குடிக்கக் கொடுத்தார்கள். கஞ்சித்தெளிவேயல்லாமற் சோறு கொடுக்கவில்லை. இவர்களுடைய வியாதியின் குணங் கடூரமாயிருந்தாலும் மூன்று பேருந் தப்பிக்கொண்டார்கள். கற்பிட்டியில் ஒரு ஆளுக்கு மாத்திரமேயல்லாமல் வேறொருவருக்கும் உண்டாகவில்லை. புரட்டாதி மீ. உகூ திகதியளவுக்குங் கச்சேரிக்கனுப்பின இறப்போர்த்தின்படி, புத்தளத்தில் வியாதிவந்தவர்கள் நூற்றுப்பத்துப்பேர். அவர்களில் இறந்தவர்கள் எண்பதுபேர். குடிசேனங்களில் மூன்றில் இரண்டுபங்குக்குமேலே புத்தளத்தைவிட்டுக் கற்பிட்டி, அக்குரைப்பற்று முதலியவிடங்களுக்குப் போய்விட்டார்கள். மழைஇன்னும்இவ்விடங்களில் இல்லாததினுலே வியாதி இன்னும் அதிகப்படும்போலேயிருக்குது. சலாபத்திலே போனகிழமையில் இரண்டு பேருக்கு மாத்திரம் பேதியுண்டாயிற்றென்றெழுதினுர். யாழ்ப்பாணத்தில் நாவாந்துறையென்றஇடத்திலே பேதிவியாதி தோன்றியிருக்குது.

Murder in Bengal.—கற்குத்தாவிலிருந்து ருய கட்டை தூரமாயிருக்கிற முஷேதபார்த்தென்னும் பட்டினத்திலே நபாபுவிடத்தில் உத்தியோகமாயிருந்த சிறிதுபேர் கூடி அவருடைய பாளயத்திற் சேவகமாயிருந்த இரண்டு மனிதரை அடித்துக் காயப்படுத்திக்கொன்றதினுல் அதிலேற்பட்ட குற்றவாளிகளில் ஐந்துபேரைப் பதினுலு வருடத்திற்கும், நாலுபேரைப் பத்து வருடத்திற்கும், இரண்டுபேரை ஆறு வருடத்திற்கும், ஒருவனை மூன்று வருடத்திற்கும் மறியலாக பிறவூருக்கேற்றும்படி தீர்மானம்பண்ணப்பட்டதுமன்றி இதுகாரியத்தை அறிந்தும்வெளியரங்கப்படுத்தாமலிருந்த ஒரு தலைவனை ஏழு வருடம் மறியலாக்கி வைக்கவுந் தீர்ப்பாயிற்று. நபாபுவுடைய முதன்மந்திரிதானே இந்தத் துற்செய்கைக்கு முதற்காரணமாயிருந்ததினுல் அவரும் அதினிமித்தங் குற்றவாளியானுர். இப்படிப்பட்ட துரோகத்தைச்செய்ய முயன்ற காரணமின்னதென்று விளங்கவில்லை.

Torn by a Dog.—சென்னபட்டணத்துப் புதினப்பத்திரிகை ஒன்றினுல் அறிகிறதென்னவெனில், அவ்விடத்திலே மெஸ்தர் கூமஸ்என்ற ஒரு துரையுடைய சிறப்பான பெண்பிள்ளையும் ஒரு வேலைகாரியும் இச்செலவு மணலிலே நடந்துபோகையில் ஒரு பெரிய நாய்வந்து அந்தப் பிள்ளையை விழுத்திப் பயங்கரப்படத்தக்க விதமாய் அதைத் துண்டு துண்டாய்க் கடித்துக் கிழித்துப்போட்டது. அந்தப்பிள்ளைசாகாமல் தப்பிக்கொள்ளக்கூடியதாயிருந்தாலும் அதின் சடஞ் சாகும்வரைக்கும் அங்கவீனமாகவே இருக்கும். இந்தச் சம்பவத்தை அநேகம் ஊரவர்கள் கிட்டப் பார்த்துக்கொண்டு நின்ருலும் அவர்கள் அந்த நாயைத்துரத்தப் பிரயாசப்படவில்லை. இந்துதேசம் முழுவதும் இப்படித்தான் நடக்குது. இப்படிப்பட்ட காரியஞ் சம்பவிக்கிறதைப் பார்த்திருக்கிறவர்களும் அப்படிப்பட்ட குற்றத்தைக் கையம்பாய்ச் செய்கிறவர்களைப்போலவே ஆக்கினைப்படுத்தப்படவேண்டியது.

Fire.—இந்தமாதம் யஉ திகதி காலமே சாவகச்சேரியிற் கோட்டுவீட்டிலே ஆரோ நெருப்புவைத்து அதை [illegible]போட்டார்களென்று அதிக துக்கத்துடனே கேள்விப்பட்டோம்.

விளம்பரம்.

வண்டிற்காரருக்கு.—இத்தைக்கொண்டு அறிவிக்கிறதென்னவெனில், யாழ்ப்பாணத்திலிருந்து வட்டுக்கோட்டைக்குப் போகிற கோவறணமேந்தின் றோட்டில் ரூம். கட்டையிலிருந்து ரும். கட்டைக்குட்பட, தெற்குப் பக்கமாயிருக்குங் கரையில், பச்சைத்தேங்காய்மட்டை அளவுவீதங் கொடுக்கப்பிரியமுள்ளவர்கள், ஒவ்வொரு மாதத்தில் எத்தனை சுமைகொடுப்பேனென்றும், ஆக ஒரு வருஷத்துக்குள் எத்தனை சுமை கொடுப்பேனென்றும் உறுதி உடன்பிடிக்கை பண்ணவேணும். அப்படியே அந்தந்த மாதாந்தக் கணக்கைச் சரிக்கட்டிக்கொடுப்பவர்களுக்கு அவர்களின் நம்பிக்கைக்குத்தக்கது ஈட்டின்பெறுமதிக்குத் தகுந்த கடனுங்கொடுக்கப்படும் அதுதவிரத் தங்கள் இட்டப்படி உடன்பிடிக்கைபண்ணுமற் கொடுப்பவர்களுக்குச் சனிக்கிழமை வரையில் கணக்குத்தீர்த்துக் காசுகொடுக்கப்படும். உடன்பிடிக்கை உறுதிசெய்யப்பிரியமுள்ளவர்கள், சீதாரி உம். வீதியிலிருக்கும் மெஸ்தர் தோமஸ் ஆடித்துரையவர்கள் வீட்டிலும் அல்லது சாவகச்சேரியின் குடாக்கரையின் வங்களாவிலும் வந்து உறுதி உடன்பிடிக்கையின் காரியங்களைத் துலாம்பரமாய் விளங்கி உறுதிசெய்துகொள்ளலாம்.

துஅாருகும் ஞூ. ஐப்பசி மீ சதி

MORNING STAR.
Jaffna, Thursday, October 13, 1853.

"TOO FAST AND TOO FAR."

We have received some very *stringent*, not to say *intemperate*, remarks from a highly esteemed correspondent, who is a fellow teetotaler—on the exuberance of temperance articles in the Star, pointing out to us six articles and scraps on this one subject in a late issue. We are obliged to the writer for the zealous interest and watchfulness he is pleased to exercise over us in this matter, and the more so as he gives us occasion for a few timely remarks which otherwise might not have been originated—remarks which we believe will place us on a fair footing with all our readers.

1. It is our *wish* and intention, and we believe our subscribers have made up their minds for it, that the advocacy of the temperance reform, *should hold* a place of some prominence in our publication—*for*, as we have often stated, our *hope* of accomplishing the object for which we have taken up our abode among the Tamil people, is in a great degree identified with the *hope* that, by the use of appropriate means, our people will be restrained from the evils of intemperance which now threaten to overwhelm them. But

2. Notwithstanding the importance we attach to the subject, we ourselves do deprecate the practice of urging this or any other subject, *ad nauseam*, upon the attention of our readers. And whereas the principles of the temperance reform, together with the most approved *methods*, and the all-impelling *motives* for reducing those principles to practice, have been freely and rather extensively discussed in our pages, we are of the opinion that it may be well henceforth to confine ourselves mainly to two topics, (1) to report the progress of the temperance movement in foreign countries—more especially in England and America—and (2) to report the signs of the times among ourselves both in the north and in the south of the island.

3. For some years the Methodists of America, the second largest religious denomination in the Union, declined co-operation with teetotalers, from an apprehension that in the Wesleyan code ample provision was made *for every good thing*. But it was an era for good, and one worthy of some note, when, on perceiving that more specific measures for the suppression of intemperance were demanded by the exigency of the case, they placed themselves among the advanced ranks as temperance reformers and thus redeemed the time they had lost.

4. Hitherto the Episcopal Church in America have as a body, stood aloof from active co-operation in temperance organizations. But at the present time, there are pleasing indications, of which we might instance the temperance lecture of the Bishop of Pennsylvania, a part of which has been published in the Star, that that body also are feeling the necessity of securing the advantages of co-operation with their fellow-countrymen for changing "the drinking usages of society," and for promoting thereby the temperance cause.

5. Having witnessed the pleasing changes that have been passed upon the two influential bodies of Christians above-mentioned in America, we keep up good heart in looking out for similar changes among Methodists, Episcopalians and other religious bodies in England. And when, by the combined influence of a reformed public opinion and parliamentary legislation, affairs shall have been set right in the mother country, there can be no failure of corresponding results even in her distant colonies. And finally, while those results in this island shall be seen passin[illegible], and being matured for publication—then, ins[illegible]ing rebuked for going *so* fast and *so* far, we shall be imperatively importuned to re-double our columns that we may give the needed publicity to the cheering intelligence, that the consummation of the temperance reform draws nigh.

But would it not be far more *honorable* and *praiseworthy*, for any distant colony to set an example in this matter worthy the imitation of the mother country, rather than to lose time and to suffer additional loss by waiting—for the benefit of an example—the tardy movements of that far off land?

P. S. Since the foregoing article was in type, we have been greatly interested to learn from the *Observer* that the subject of the "drinking usages of society" has already been brought before the Legislative Council of Ceylon, and that important disclosures of sentiment and practice have been made. We were not aware that teetotalism had made so much progress in high places, and are happy to learn also that Her Majesty, the Queen, has an Advocate in the island, so competent, both by precept and by practice, to place the custom of *smoking*, as auxiliary to *drinking*, in its true light. We are well pleased that our Representative and fellow parishioner, Mr. Edirmanasinghain was able to read so instructive and so suggestive a lesson to the Honorable Councilors on the subject in debate.

The appended notice in the *Observer* of a murder "committed at the arrack distillery," Barbaryn, and "said to be the 4th or 5th murder committed in that village," may perhaps be thought an appropriate peroration to the Honorable Councilors' debate.

"In vino veritas," (truth in wine.) And the pen of inspiration has informed us what the "truth" of the matter is, viz: that "Wine is a mocker," and that "whosoever is deceived hereby is *not wise*."

In short, may we not fairly *gather* from the whole discussion that the time is at hand when—as is the case elsewhere—the conviction of our Ceylon legislators, will be satisfied with nothing less than the enactment of the "Maine Law?"

OPENING OF A VILLAGE CHURCH.

On Thursday the 22d ult., a church was dedicated to the worship and service of God in the village of Alavertty in the parish of Mallagum. Alavertty is a populous and thriving village, nearly equi-distant from the four mission stations of Oodooville, Tillipally, Panditeripo and Manepy, but not easy of access from either of them. The following was the order of the opening exercise:

Singing and Invocation.—A statement of the object of the meeting—history of the enterprize of erecting the church and state of the funds, by Rev. D. Poor.

Reading select portions of Scripture—by Mr. S. Payson, native preacher.

Consecrating prayer, by Rev. L. Spaulding.

Singing—Sermon from the text, "This is none other but the house of God, and this is the gate of heaven"—by Rev. B. C. Meigs.

Singing—An address to the villagers founded on the passage, "Come thou with us and we will do thee good." Num. 10: 29, 32—by Mr. N. Niles, native preacher. Doxology and Benediction.

About 250 natives were present on the occasion—also most of the American missionaries and several gentlemen from the town of Jaffna.

The church-building, which is composed of substantial stone walls, with gable ends, is 54 feet long and 30 feet wide, having three doors and four windows. The roof is sustained by eight wooden pillars and eluppay (olive) beams neatly prepared.

On the north elevation is a small belfry with ornamental mason work. The cost of the building, in its present state, was £74, including the sum of £4, paid for the site on which it stands.

In aid of the undertaking the following sums have been contributed:

1. By the villagers, namely: Mr. L. Ripley and wife £7; £3 from the former, and £4 (the cost of the site) from the latter. Dr. I. B. Trask, £4; Mr. E. Rockwood, £2 12*s*.; Mr. M. Hallock, Odiar of Alavetty, £2; Dr. J. Cleaveland £2; Dr. S. Ropes, £1; Mr. Muttiah Valupilly, 15*s*.; Mr. J. Arnold 7*s*.; Mr. J. Page, 5*s*. Total £19 19.

2. By Tamulians of other localities, namely:—Mr. H Martyn, £1; Mr. M. Welch, 6*s*.; Mr. N. Strong, 5*s*.; Mr. T. Snell, 2*s*.; Mr. N. Russel, 2*s*. Total £1 15.

3. By Foreigners, namely:—American missionaries, £11 2*s*.; H. Pole, Esq., £5; J. W. Birch, Esq., £5; F. H. Campbell, Esq., £2 2*s*.; Dr. Cowen, £1. Total, £24 4.

4. From a local village church-building fund, originated by donations in equal proportion from Tamulians and Europeans, £15. Grand total, £60 18

Balance against the building, 13 2

It is hoped that this debt will be liquidated by further donations from the villagers, more especially from those of the educated class who may not hitherto have found it convenient to render assistance. Donations however are solicited from other quarters—whether from natives or Europeans who may wish to have a share in the concern. If more than sufficient to remove the debt be received, it will be invested in the "Village Church Building Fund."

We have long observed great liberality displayed by many of the native inhabitants in the erection of temples for idol worship, but we are happy to know that there is a growing conviction in the minds of the community that there is but one living and true God who is worthy to be worshipped. May we not then indulge the *hope* that from among those who would aspire to noble acts of generosity and public utility, some will come forward to make an investment in this church enterprise, either by tiling the roof or by furnishing a "church-going bell?" Donations in aid of the objects above specified will be thankfully received by the Rev. D. Poor, or the editor of the Morning Star.

